**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.52** **நாள் : 18.04.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து வரி சம்பந்தப்பட்ட வழக்குகளை சமரசம் மூலம் தீர்வு காண தேசிய மக்கள் அதாலத் நடைபெற உள்ளது.**

வரி வருவாய் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது. 2017–2018ம் ஆண்டில் சொத்துவரி மூலமாக ரூ.721 கோடி வரிவசூல் செய்யப்பட்டுள்ளது. வரி இனங்களில் தீர்வு வேண்டி நீதிமன்றங்களில் 322 வழக்குகள் நிலுவையில் உள்ளதால், ஏறத்தாழ ரூ.80 கோடி மதிப்பிலான இனங்கள் நிலுவையில் உள்ளது. இதனை சரிசெய்யும்பொருட்டு, சமரசம் மூலம் தீர்வு காண முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து வரி சம்பந்தப்பட்ட வழக்குகளை சமரசம் மூலம் தீர்வு காண மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வருகிற 22.04.2018 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.30 முதல் **தேசிய மக்கள் அதாலத் (National Lok Adalat)** நடைபெற உள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி சம்பந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து சமரசம் மூலம் தீர்வு காண விரும்பும் பொதுமக்கள் 21.04.2018 தேதிக்கு முன்னதாக ரிப்பன் மாளிகையில் உள்ள வருவாய் அலுவலர், வருவாய் துறை (Revenue Officer), பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**